செ.வெ.எண்: 790 நாள்: 26.11.2019

**பள்ளி மாணவ மாணவிகளுக்கான சுற்றுலாவினை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இஆப., அவர்கள் கொடியசைத்து தொடங்கி வைத்தார்**

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் அன்னை சத்யா விளையாட்டு அரங்கில் சுற்றுலாத்துறை சார்பில் பள்ளி மாணவ மாணவிகளுக்கான சுற்றுலாவினை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இஆப., அவர்கள் இன்று(26.11.2019) கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படியும் பள்ளி மாணவ-மாணவியர்களிடையே சுற்றுலா செல்வதன் அவசியத்தை உணர்த்தும் விதமாகவும், சுற்றுலா விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலும் தமிழ்நாடு சுற்றுலாத்துறை சார்பில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு நாள் விழிப்புணர்வு சுற்றுலா நடத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி, தஞ்சாவூர் மாவட்டத்தில் நன்கு பயிலும் ஏழை மாணவ மாணவியர்களில் 150 பேர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகம் மூலம் தேர்வு செய்யப்பட்டு, மூன்று சொகுசு பேருந்துகளில் புதுக்கோட்டை மற்றும் சிவகங்கை மாவட்டங்களுக்கு 26.11.2019 அன்று சுற்றுலா அழைத்துச் செல்லப்பட்டனர். சுற்றுலா செல்லும் பேருந்துகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இஆப., அவர்கள் தஞ்சாவூர் அன்னை சத்யா விளையாட்டு அரங்கில் இன்று(26.11.2019) கொடியசைத்து துவக்கி வைத்தார்.

சுற்றுலா செல்லும் மாணவர்களுக்கு இலவசமாக சிற்றுண்டி, மதிய உணவு, தேநீர், பிஸ்கட், புத்தகப்பை, பேனா, அளவுகோல், பென்சில், ரப்பர் ஆகியவை வழங்கப்பட்டது. சுற்றுலா செல்லும் மாணவ மாணவியர்களின் பாதுகாப்புக்காக ஆறு ஆசிரியர்கள் மற்றும் ஆறு ஆசிரியைகள் மாணவர்களுடன் சென்றனர். புதுக்கோட்டை மாவட்டம் திருமயம்கோட்டை, திருமயம் சிவன் கோயில், கானாடுகாத்தான் பாரம்பரிய வீடுகள், செட்டிநாடு கைத்தறி நெசவு கூடம் மற்றும் ஆத்தங்குடி டைல்ஸ் தயாரிப்பு கூடம், ஆத்தங்குடி பெரிய வீடு போன்ற சுற்றுலாத் தலங்களுக்கு மாணவ மாணவியர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். சுற்றுலா நிகழ்ச்சியில் கலந்துகொண்ட மாணவ மாணவிகளுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் திரு.பழனி, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திரு.இராமகிருட்டிணன், மாவட்ட சுற்றுலா அலுவலர் திரு.ஜெயக்குமார், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு.ரவீந்திரன், மாவட்ட விளையாட்டு அலுவலர் திரு.ராம சுப்ரமணிய ராஜா மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

செய்தி வெளியீடு : செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.